

முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக "உங்கள் கனவ சொல்லுங்க" திட்டத்தின் கீழ் விரிவான கணக்கெடுப்பு பணியினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, சேலம் மாவட்டம், ஓமலூர் கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சி, அண்ணா நகர் பகுதியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தன்னார்வலர்களுடன் இணைந்து "உங்கள் கனவ சொல்லுங்க" திட்டத்தின் கீழ் கணக்கெடுப்பு படிவங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) விவேக் யாதவ், வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட செயல் அலுவலர் மா.ஜெய் கணேஷ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# திராவிடப் பொங்கல் விழா - சமூக நீதிக்கான திருவிழா!

### மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!



உழைப்பின் பெருமிதத்தை உலகுக்கு உணர்த்திடும் தமிழர்களின் தனித்திருநாள். உயிர்களுக்கு ஆதாரமாகவுள்ள உதயசூரியனை, உழுத மண்ணினை, உதவும் கால்நடைகளை வணங்கி நன்றி கூறும் தமிழரின் பண்பாட்டு பெருநாளே பொங்கல் திருநாள்!

பொங்கல் என்றாலே இனிமை-மகிழ்ச்சி, அதிலும் நமது கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர்" அவர்களின் "திராவிட மாடல் ஆட்சி" அமைந்த பிறகு மக்களின் இதயத்திலே இரட்டிப்பு இனிப்பும் இனிமையும் கலந்த இந்த நன்நாளினை சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் மாநகர வட்டக் கழகங்கள், ஒன்றிய ஊராட்சி கிளைக் கழகங்கள், பேரூர் வார்டு கழகங்கள் தோறும் இருவண்ண தோரணங்கள் கட்டி, மஞ்சள் கரும்பு வைத்து "சமத்துவம் பொங்கட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்" என வண்ண கோலமிட்டு "திராவிட பொங்கல்" விழாவாக கொண்டாடிட வேண்டுமெனவும்,

கீழ்க்கண்ட நிகழ்ச்சிநிரலில் "துணை முதலமைச்சர் இளந்தலைவர்" அவர்களின் பிறந்தநாள் விழா – திராவிட பொங்கல் – சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் மற்றும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்குவதற்கு என்னோடு மாவட்ட கழக நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்களும் வருகை தர உள்ளார்கள். எனவே பொதுமக்கள் அனைவரையும் ஈர்க்கிற வகையில் எழுச்சிமயமாக கொண்டாடிட சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொங்கல் விழா நடைபெறும் விவரம் வருமாறு:

**திராவிட பொங்கல் விழா**

| நாள் : 13.01.2026 – செவ்வாய்கிழமை | | | |
|---|---|---|---|
| வ.எண் | ஒன்றியம் | இடம் | நேரம் |
| 1. | ஓமலூர் தெற்கு ஒன்றியம் | கருப்பூர் | காலை 10.00 |
| 2. | ஓமலூர் வடக்கு ஒன்றியம் | தேக்கம்பட்டி | காலை 10.30 |
| 3. | காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியம் | காடையாம்பட்டி | முற்பகல் 11.00 |
| 4. | காடையாம்பட்டி மத்திய ஒன்றியம் | பண்ணப்பட்டி | முற்பகல் 11.30 |
| 5. | காடையாம்பட்டி மேற்கு ஒன்றியம் | கஞ்சநாயக்கன்பட்டி | நண்பகல் 12.00 |
| 6. | ஓமலூர் கிழக்கு ஒன்றியம் | பல்பாக்கி பிரிவு | நண்பகல் 12.30 |
| 7. | தாரமங்கலம் வடக்கு ஒன்றியம் | மேட்டுமாரனூர் | பிற்பகல் 02.30 |
| 8. | தாரமங்கலம் கிழக்கு ஒன்றியம் | எல்லாயூர் | மாலை 03.00 |
| 9. | ஓமலூர் மேற்கு ஒன்றியம் | பாகல்பட்டி | மாலை 03.30 |
| 10. | சேலம் வடக்கு ஒன்றியம் | அய்யம்பெருமாம்பட்டி | மாலை 04.00 |
| நாள் : 14.01.2026 – புதன்கிழமை | | | |
| வ.எண் | பகுதி | இடம் | நேரம் |
| 11. | அழகாபுரம் பகுதி | புத்திரகவுண்டர் திருமண மண்டபம், படையப்பா நகர் | காலை 09.00 |
| 12. | சூரமங்கலம் பகுதி | கவுன்சிலர் அலுவலகம் அருகில் உள்ள மைதானம் | காலை 09.30 |
| 13. | அம்மாபாளையம் பகுதி | மாரியம்மன் கோவில் திடல் | காலை 10.00 |
| 14. | மெய்யனூர் பகுதி | பள்ளப்பட்டி மாரியம்மன் கோவில் அருகில் | காலை 10.30 |
| 15. | கொண்டலாம்பட்டி பகுதி | நெசவாளர் காலனி | முற்பகல் 11.00 |
| 16. | அன்னதானப்பட்டி பகுதி | நெத்திமேடு பஸ் நிறுத்தம் | முற்பகல் 11.30 |
| 17. | கருங்கல்பட்டி பகுதி | குமரன் நகர் 55வது கோட்டம் | நண்பகல் 12.00 |
| 18. | குகை பகுதி | குகை மாரியம்மன் கோவில் | நண்பகல் 12.30 |
| 19. | கிச்சிப்பாளையம் பகுதி | சின்னமாரியம்மன் கோவில் அருகில் | பகல் 01.00 |
| 20. | அம்மாபேட்டை பகுதி | குமரகிரி ஏரி | பகல் 01.30 |
| 21. | பொன்னம்மாபேட்டை பகுதி | 35வது வட்டம் – 40 அடி ரோடு | மாலை 03.00 |
| 22. | | 36வது வட்டம் – சத்யா நகர் | மாலை 03.30 |
| 23. | | 9வது வட்டம் – வாய்க்கால் பட்டறை | மாலை 04.00 |
| 24. | பொன்னம்மாபேட்டை பகுதி | 10வது வட்டம் – தண்ணீர்தொட்டி பஸ் நிறுத்தம் | மாலை 04.30 |
| 25. | அரிசிப்பாளையம் பகுதி | 11வது வட்டம் மோகன் விளையாட்டு திடல் | மாலை 04.45 |
| 26. | | 34வது வட்டம் – ஜோதி டாக்கிஸ் | மாலை 05.00 |
| 27. | | 33வது வட்டம் – பங்களா தெரு | மாலை 05.30 |
| நாள் : 15.01.2026 – வியாழக்கிழமை | | | |
| 28. | கன்னங்குறிச்சி பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | காலை 08.30 |
| 29. | அஸ்தம்பட்டி பகுதி | 6வது வட்டம் – கே.கே.நகர் | காலை 09.00 |
| 30. | | 7வது வட்டம் – ஆத்துக்காடு | காலை 09.30 |
| 31. | | 8வது வட்டம் – சின்னதிருப்பதி | காலை 10.00 |
| 32. | | 13வது வட்டம்– TVS காலனி | காலை 10.30 |
| 33. | குமாரசாமிபட்டி பகுதி | 12வது வட்டம்– | முற்பகல் 11.00 |
| 34. | | 14வது வட்டம் – வின்சென்ட் | முற்பகல் 11.30 |
| 35. | | 15வது வட்டம் – கிருபா மருத்துவமனை அருகில் | நண்பகல் 12.00 |
| 36. | | 16வது வட்டம் – 40அடி ரோடு | நண்பகல் 12.30 |
| 37. | கோட்டை பகுதி | 29வது வட்டம் – நலம் மருத்துவமனை அருகில் | பகல் 01.00 |
| 38. | | 31வது வட்டம் – ஸ்டேட் பேங்க் அருகில் | பகல் 01.30 |
| 39. | | 32வது வட்டம் – கமலா மருத்துவமனை அருகில் | பிற்பகல் 02.00 |
| 40. | செவ்வாய்பேட்டை பகுதி | 26வது வட்டம் – சாமிநாதபுரம் மாரியம்மன் கோவில் அருகில் | மாலை 03.30 |
| 41. | | 27வது வட்டம் – நாராயணசாமிபுரம் | மாலை 0 4.00 |
| 42. | | 28வது வட்டம் – நரசிம்மசெட்டி ரோடு | மாலை 04.30 |
| 43. | | 30வது வட்டம் – மீனாட்சி அம்மன் கோவில் மைதானம் | மாலை 05.00 |

**அமைச்சர் இரா.இராஜேந்திரன்**
செயலாளர், சேலம் மத்திய மாவட்ட தி.மு.க.

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர்

# கே.எஸ். அழகிரியின் துணைவியார் திருமதி வத்சலா மறைவு!

## முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.13 –

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

**தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் கே.எஸ். அழகிரி அவர்களின் அன்புத் துணைவியார் திருமதி வத்சலா அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.**

**உயிருக்கு உயிராக, பக்கத்துணையாக இருந்த வாழ்விணையரை இழந்து வாடும் சகோதரர் கே.எஸ்.அழகிரி அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

# உண்மையை உரக்கச் சொல்லக்கூட முடியாத அளவுக்கு அடக்குமுறை!




**1965**ல் தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்தித் திணிப்புப் போராட்டத்தை மையமாகக் கொண்டு, அதற்கு எதிரான மாணவர்களின் எழுச்சியை ஆவணப்படுத்த வேண்டுமென்கிற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட திரைப்படம் 'பராசக்தி'. இந்தப் படத்தில் வரும் 25 காட்சிகளை நீக்கவும், மாற்றவும் ஒன்றிய திரைப்பட சான்றிதழ் வாரியம் பரிந்து ரைத்தது. இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் அவற்றை திரைப்படத் தயாரிப்புக் குழுவினர் மேற்கொண்டதையடுத்து அந்தப் படத்திற் கான 'யுஏ' சான்றிதழ் வழங்கப்பட்டு இருக்கிறது. இதன்மூலம் ஒன்றிய பாரதிய ஜனதா அரசு இந்தித் திணிப்பில் மும்முரமாக செயல்படுகிறது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள் மீதான வெறுப்பினையும் ஒன்றிய பாரதிய ஜனதா அரசு கக்கி இருப்பது இதன்மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

முதலாவதாக, 'பராசக்தி' திரைப்படத்தில் 'தீ பரவட்டும்' என்ற வாக்கியம் நீக்கப்பட்டு 'நீதி பரவட்டும்' என்ற வாக்கியம் சேர்க்கப்பட்டு இருக்கிறது. 1943 ஆம் ஆண்டு கம்பராமாயணம், பெரிய புராணம் குறித்து நடைபெற்ற விவாதங்களில் பேரறிஞர் அண்ணா, திரு. ஆர்.பி. சேதுபிள்ளை, திரு.சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசிய உரைகள் புத்தகமாக வெளியிடப்பட்டு அதற்கு 'தீ பரவட்டும்' என்ற பெயர் சூட்டப்பட்டது. இந்த 'தீ பரவட்டும்' என்கிற வாக்கியம்தான் தற்போது 'பராசக்தி' திரைப்படத்தில் மாற்றியமைக்கப்பட்டு இருக்கிறது. தீ பரவட்டும்' என்கிற வாக்கியம் நாகரிகமற்ற வார்த்தை அல்ல என்பது நன்கு தெரிந்திருந்தும், அதனை ஒன்றிய திரைப்பட சான்றிதழ் வாரியம் நீக்கி இருக்கிறது என்றால் இதில் ஏதோ உள்நோக்கம் இருக்கிறது என்பது தெளிவாகிறது.

இரண்டாவதாக, 'அண்ணாதுரை ஆளுகிறான்' என்ற வார்த்தையும் 'பராசக்தி' படத்தில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. 1968 ஆம் ஆண்டு டிசம்பர் ஒன்றாம் தேதி சென்னை, பாலர் அரங்கத்தில் சென்னை மாகாணத்திற்கு 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டியது தொடர்பாக நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு பேசிய பேரறிஞர் அண்ணா அவர்கள், "அண்ணாதுரை கொண்டு வந்தவற்றையெல்லாம் மாற்ற வேண்டுமென்று எண்ணும்போதே மக்கள் வெகுண்டெழுவார்கள் என்ற அச்சமும் கூடவே எழும் இல்லையா, அந்த அச்சம் இருக்கின்ற வரையில் இங்கே யார் ஆண்டாலும் 'அண்ணா துரை இந்த நாட்டை ஆள்கிறான்' என்று பொருள்" என்று பேசினார்.



**டாக்டர் வா.மைத்ரேயன்,**
*நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர். தி.மு.க. கல்வியாளர் அணி துணைத் தலைவர்*

இந்த வாக்கியம்தான் "பராசக்தி" திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் உண்மையிலேயே இந்த நாட்டை ஆண்டார் என்பதும், அவர் ஒரு விழாவில் இதைப் பேசியிருக்கிறார் என்பதும் உண்மை. இந்த வாக்கியத்தை பயன்படுத்தக் கூடாது, இந்த உண்மை யைக்கூட சொல்லக்கூடாது என்று ஒன்றிய அரசு கூறுவது கடும் கண்டனத்திற்குரியது.

மூன்றாவதாக, 'இந்தி அரக்கி' என்ற வாசகத்தில் வருகின்ற 'அரக்கி' என்பதை வேறு விதமாக மாற்ற ஒன்றிய அரசு அறிவுறுத்தியதையடுத்து, அந்த வார்த்தையும் மாற்றப்பட்டுள்ளது. 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது கோயம்புத்தூரில் 'இந்தி அரக்கி' என்று எழுதப்பட்ட கொடும்பாவியை மாணவர்கள் இழுத்துச் சென்றனர். அந்தக் காலத்தில் இந்தி மொழி திணிக்கப்பட்ட நிலையில், தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சத்தில் இந்தித் திணிப்புப் போராட்டம் நடைபெற்றது. இது உண்மையிலேயே நடைபெற்ற ஒரு நிகழ்வு. இந்த நிகழ்வில் வன்முறைகள் ஏதும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், 'அரக்கி' என்ற வார்த்தையை நீக்குமாறு ஒன்றிய திரைப்பட சான்றிதழ் வாரியம் உத்தர விட்டுள்ளது கேலிக்கூத்தா னது.

அடுத்தபடியாக, 'இந்தி என் கனவை அழித்தது' என்ற வாசகத்தை மாற்றியும், 'இந்தி கத்துகிட்டு' என்ற வாசகத்தை ஒலி இழக்கச் செய்தும் ஒன்றிய திரைப்பட சான்றிதழ் வாரியம் உத்தரவு பிறப்பி த்துள்ளது. இதுபோல் இன்னும் பல வாசகங்கள் நீக்கப்பட்டுள்ளன. மேலே குறிப் பி ட்டுள்ள அனைத்து வார்த்தைகளும் நாகரிகமான வார்த்தைகள் என்பதோடு, உண்மையை எடுத்துரைக் கும் வார்த்தைகள் என்பதை யும், நடந்தவற்றை கூறுபவை என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

உண்மையான வார்த்தைகளை மாற்றி அமைக்கச் சொல்வதும், நீக்கச் சொல்வதும் ஏற்புடையதல்ல. ஒன்றிய பாரதிய ஜனதா பாசிச அரசின் நடவடிக்கைகள் ஜனநாயகத்திற்கு எதிரான செயல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல, அமலாக்கத் துறை, புலனாய்வுத் துறை, வருமான வரித் துறை என்ற வரிசையில் சென்சார் போர்டையும் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக ஒன்றிய அரசு பயன் படுத்துவது வெட்கக்கேடானது. இந்த பாசிசக் கொள்கையை ஒன்றிய அரசு கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றிய அரசின் பாசிசக் கொள்கைக்கு தமிழ்நாட்டு மக்கள் வருகின்ற தேர்தலில் தக்கப் பாடம் புகட்ட வார்கள் என்பதை ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களவைத் தேர்தலைப் போல, சட்டமன்றப் பொதுத் தேர்தலிலும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஓர் இடத்தில் கூட வெற்றி பெறாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அமைச்சர் கயல்விழி செல்வராஜ் மாமியார்

# கோ.பாலாமணி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



திருப்பூர், ஜன. 13 –

மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என். கயல்விழி செல்வராஜ் மாமியாரும், திருப்பூர் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் தாராபுரம் வழக்கறிஞர் கே.செல்வராஜ் தாயாருமான கே.பாலாமணி (வயது 86) அவர்கள் நேற்று (12.01.2026 – திங்கட் கிழமை) காலை 6.30 மணியளவில் உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவிக்க வருந்துகிறோம்,

அவருக்கு கே.செல்வ ராஜ், கே.ரவி என்ற மகன்களும், கே. அமுதா, கே.ராஜலட்சுமி என்ற மகள்கள் உள்ளனர். கே.ராணி என்ற மகள் ஏற்கனவே காலமாகி விட்டார்.

மறைந்த கே.பாலாமணி அவர்களின் இறுதிச் சடங்கு மாலை 6.00 மணியளவில் மணியம்மை நகரில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு தாராபுரம் மின் மயானத்தில் உடல் தகனம் செய்யப்பட்டது.

தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகராட்சி தி.மு.க. சார்பில், 25வது வார்டில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி ஆகியோர் சமத்துவப் பொங்கல் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்து இனிப்புகள் வழங்கினார்கள். இந்நிகழ்வில் டி.கணேசன், ஜெ.சுதாகர், இரா.அசோக்குமார், எல்.இராஜேந்திரன், எஸ்.வாசுதேவன், ப்ரியம் சசிதரன், சிவானந்தம், எஸ்.இரவிச்சந்திரன், டி.செந்தாமரை, மு.கண்ணன், இரா.செல்வராஜ், டி.வி.கிருஷ்ணமூர்த்தி, இரா.கல்யாணசுந்தரம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.